### பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

**1-5 வரையான வினாக்களுக்கு சரியான விடையின்கீழ் கோடிடுக.**

1. சனநாயகத் தலைவரிடம் காணப்பட வேண்டிய பண்பு
   1. உறுதியின்மை 2. செவிமடுக்காமை 3. குறுகியநோக்கு 4. அர்ப்பணிப்பு

2. இயற்கை அனர்த்தங்களில் ஒன்று
   1. வீதிவிபத்து 2. உணவு நஞ்சாதல் 3. நாய்க்கடிக்கு உள்ளாதல் 4. வறட்சி

3. இலங்கையில் சுனாமிப் பேரலை ஏற்பட்ட ஆண்டு
   1. 2007 2. 2003 3. 2004 4. 2009

4. தீயணைப்புப் படையின் தொலைபேசி இலக்கம்
   1. 119 2. 1929 3. 110 4. 118

5. ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் தொடர்பான சாசனம் கொண்டுள்ள உறுப்புரைகள்
   1. 50 2. 62 3. 54 4. 60

**6-10 வரையான வினாக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

6. கெமிசெரிய என்பது மாணவர் போக்குவரத்துச் சேவையாகும். ( )

7. யுனெஸ்கோ என்பது ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர் நிதியமாகும். ( )

8. துக்கம் என்ற மனவெழுச்சியில் அழுகை வெளிப்படுகிறது. ( )

9. வாகனத்தடுப்பு ஒழுங்காக இயங்காமை விபத்தை ஏற்படுத்தும். ( )

10. சுரங்க அகழ்வு இயற்கை அனர்த்தமாகும். ( )

**11-15 வரையான வினாக்களுக்கு பொருத்தமான சொற்களை பயன்படுத்தி இடைவெளி நிரப்புக.**
**(தொடர்பாடல் திறன், கூட்டுறவு, வங்கி, புவியதிர்வு, கண்ணில்படுதல்)**

11. ............................................................ சேவை பிரித்தானியர் ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்டது.

12. ....................................................... புவியில் நிகழும் பௌதீக செயற்பாடாகும்.

13. தலைவர்களிடம் காணப்பட வேண்டிய பண்பு ................................................................ ஆகும்.

14. இரசாயனப்பொருள் ............................................. மூலம் உடலில் செல்கிறது.

15. ஒருவர் எல்லோருக்கும் எல்லோரும் ஒருவருக்கு ........................................... சங்கத்தின் மகுட வாசகமாகும்.

**16-20 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 16. பல் பண்பாடு | பௌத்தர்கள் |
| 17. பஞ்சாபி | பொலிஸ் |
| 18. எசல வைபவம் | வனப்பாதுகாப்பு திணைக்களம் |
| 19. பாதுகாப்புப்படை | இந்தியா |
| 20. சுற்றாடல் பாதுகாப்பு | மொழி |

(20x2=40 புள்ளிகள்)

## பகுதி - II

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) 1. பொதுச் சேவை என்றால் என்ன?
2. பொதுச் சேவைகள் நான்கினைக் குறிப்பிடுக.
3. பொதுச் சேவையின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

02) 1. சிறுவர் உரிமைகள் என்றால் என்ன?
2. சிறுவர் உரிமைகள் நான்கினைக் குறிப்பிடுக.
3. சமூகத்தில் சிறுவர்களுக்கு சமவாய்ப்பு கிடைக்காமைக்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

03) 1. தலைமைத்துவம் என்றால் என்ன?
2. ஜனநாயகத் தலைமைத்துவப் பாங்குகள் நான்கினைக் குறிப்பிடுக.
3. ஜனநாயக வாழ்வுடன் தொடர்புடைய பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

04) 1. பண்பாடு என்றால் என்ன?
2. பல்பண்பாடு சமூகங்கள் வாழும் நாடுகள் நான்கு தருக.
3. பல்பண்பாட்டு சமூகம் கொண்ட நாட்டில் பிரஜைகள் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

05) 1. இயற்கை அனர்த்தம் என்றால் என்ன?
2. வெள்ளப்பெருக்கு ஏற்படக் காரணமான மனித செயற்பாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.
3. வெள்ளப்பெருக்கால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

06) 1. வரட்சி என்பது யாது?
2. இலங்கையில் வரட்சி ஏற்படும் மாவட்டங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
3. வரட்சியின் பாதிப்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

07) 1. அனர்த்த முகாமைத்துவம் என்றால் என்ன?
2. உணவு நஞ்சடைவதற்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
3. மருந்துப் பொருட்களின் பாவனையின்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)